செ.கு.எண்: 310

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.8.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பேரூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.பிரசன்னா என்பவர் 26.8.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தின் அருகில் நின்று கொண்டிருந்த போது, குழுமணியிலிருந்து சத்திரம் பேருந்து நிலையம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், அ.தொட்டியப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. சுந்தர்ராஜ் 28.8.2012 அன்று உசிலம்பட்டி வட்டம், டி.புதுப்பட்டி – ராஜபாளையம் சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. பிரசன்னா மற்றும் திரு. சுந்தர்ராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. பிரசன்னா மற்றும் திரு. சுந்தர்ராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்